**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 136/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.6 |
| Name : | திரு. சந்திரசேகர் |
| Father's Name/Husband Name: | திரு. அருணாசலம் |
| Village : | நமையூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 68 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 பார்வதி என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 7 அல்லது 8 வருடங்களுக்கு முன்பு போலிசார் அ.சா.1 பார்வதி என்பவரது காட்டிற்கு வந்துள்ளனர். போலிசார் நகையை பறித்து சென்றது சம்பந்தமாக விசாரித்து கொண்டிருந்தனர். போலிசாரிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். போலிசார் எழுதி கையெழுத்து வாங்கினார்கள். என்ன எழுதிக் கொண்டு கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. பார்வை மகஜரில் உள்ள **இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார் என்றும், கடந்த 10.09.2017 அன்று காலை 8 மணியளவில் போலிசார் என் முன்னிலையிலும், சாட்சி துரைசாமி முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர் என்றும், அந்த பார்வை மகஜரில் நானும், சாட்சி துரைசாமியும் சாட்சிகளாக இருந்து கையொப்பமிட்டோம் என்றும், தற்போது உடல்நிலை சரியில்லை என்பதால் உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிர் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 புகார்தாரர் பார்வதி எனது பக்கத்து காடு என்பதால் நல்ல பழக்கம் வழக்கம் உறவு என்று சொன்னால் சரிதான். நான் கையொப்பம் போட்ட பார்வை மகஜரில் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த வருடம், தேதி, மாதம் என்ற விவரம் தெரியுமா என்றால் ஞாபகமில்லை.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.